# நவ சமசமாஜக் கட்சிக்கு ஏன் வாக்களிக்கவேண்டும்?

MR. SIVA. JOTHILINGAM
B.A.(Hons) Be-Sc., Dip-IN-IA (BCIS),
Teacher,
COLOMBO-13.



யார் இந்த

MR. SIVA. JOTHILINGAM
B A (Hons) Po-Sc., Dip-IN-IA (BCIS),
Teacher,
Goodshepherd Convent,
COLOMBO-13.

# யூ. என். பி. யும் தமிழ் மக்களும்

ஜே. ஆர். ஜயவர்த்தன தனது அரசியல் வாழ்க்கையை இன வாதத்துடனேயே ஆரம்பித்தார். 1940 ஆம் ஆண்டுகளில் இலங்கை தேசிய காங்கிரசின் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்த ஜே. ஆர். ஜயவர்த்தன 1948 இல் உருவாக்கப்பட்ட முதலாவது யூ. என். பி. அரசாங்கத்தில் அமைச்சர் பதவியை வகித்தவர். 1953 இல் நிதி மந்திரியாக இருந்த இவர் அரிசியின் விலையை உடனடியாக 25 சதத்திலிருந்து 70 சதத்திற்கு உயர்த்தினர். இதனல் வயிற்றிலடிக்கப்பட்ட இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள் பொங்கியெழுந்து நடாத்திய கர்த்தால் போராட்டம் அந்த அரசாங்கத்துக்கே உலைவைத்தது. இன்று நாட்டின் 'முதலாவது தெரிவுசெய்யப்பட்ட ஜனதிபதி' யென தன்னைப் பிரகடனப்படுத்தியுள்ள இவரின் சொல்லும் செயலும் அன்றையவிடப் பன்மடங்கு மோசமானதும் பயங்கரமானதாயுமுள்ளன.

ஜே. ஆர். ஜயவர்த்தனவும் யூ. என். பியும் குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு பேராபத்து விளையக்கூடியமுறையில் நடந்திருப்பதை பின் காட்டப்பட்டிருக்கும் ஒரு சில சம்பவங்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

1) 1944 மே மாதம் சட்டசபையில் சிங்களம் இந்த நாட்டின் ஒரே உத்தியோக மொழியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணையை முதன்முதலாக முன்வைத்தவர் ஜே. ஆர் ஜயவர்த்தன. எனினும் இப் பிரேரணை அன்று அமுல் செய்யப்படவில்லை. பின்பும் அதாவது 1955 இல் சிங்களம் மட்டுமே உத்தியோக மொழி ஆக்கப்படவேண்டுமென்ற பிரேரணையை யூ. என. பி தான் முதலில் முன்வைத்தது. தமிழ் மொழிக்கு எந்தவித இடமும் அளிக்காத இப் பிரேரணையை முன்மொழிந்தவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனவேதான்.

2) 1948 இல் யூ. என். பி. மலையகத் தமிழ் மக்கள் அனைவரினதும் வாக்குரிமையையும் குடியுரிமையையும் இரவோடிரவாகப் பறித்தது.

3) 1958 இல் நடந்த இனக்கலவரத்திற்கு ஜே. ஆர். தூபமிட்டார். 1957 இல் பண்டாரநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்துக் கண்டிக்குப் பாதயாத்திரை செய்து அந்த ஒப்பந்தத்தைக் கடைசியில் கிழித்தெறியச்செய்வதற்குக் காரணமாயிருந்தவர் ஜே. ஆர்.

4) தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களை 1948 ஆம் ஆண்டு தொடக்கம் யூ. என். பி. ஆட்சி திட்டமிட்ட குடியேற்றம் மூலம் பறித்து வருகிறது. (கல்லோயா, அல்லை, கந்தளாய், பதவியா பன்குளம், கொண்டச்சி முதலியன.)

5) 1958 இனக்கலவரத்தின் முன் யூ. என். பி. யின் சிங்கள ஏடான ''சியரட்டா'' பின்வருமாறு எழுதியது. ''இந்த நாட்டைத் தமிழ் மக்களிடமிருந்து காப்பாற்ற முழுச்சிங்கள இனமும் ஒன்றாக எழுந்து பிரதமர் பண்டாரநாயக்காவிடம் கேட்க வேண்டும்'' (1.58)

நாட்டையும் எமது சுதந்திரத்தையும் காப்பாற்றுமுகமாக பண்டாரநாயக்காவையும் அவரது கையாட்களையும் இராஜினாமாச்செய்யுமாறு நிர்ப்பந்திக்கவேண்டும். அல்லாவிட்டால் நாம் தமிழரால் அடிமைப்படுத்தப்பட்டுவிடுவோம். சிங்கள மக்களே எழுந்து முன்னேறுங்கள். சிங்கள இளைஞர்களே எழுங்கள். இதைத் தடுங்கள். இனத்துக்காக உயிரைப்பற்றி ஒருவரும் யோசிக்கக்கூடாது. 'கொலை செய்யக்கூடிய அத்தனைபேரையும் கொலைசெய்' அல்லாவிட்டால் தற்கொலை செய்துவிடு. சிங்கள மக்களே எழுந்து பாருங்கள். முன்னேறுங்கள். வாழவிருக்க வேண்டாம். கொலைசெய்யுங்கள்''. (சியரட்ட 16-5-58)

6) 1960 ஆம் ஆண்டில் (தேர்தல் பிரசாரத்தின்போது) சிறிமா பண்டாரநாயக்காவும் செல்வநாயகமும் இலங்கையை இரண்டாக வெட்டுவதாகக் காட்டும் படம் ஒன்றைக் கொண்டுதிரிந்து பிரசாரம் செய்த கட்சி யூ. என். பி.

7) 1964 ஆம் ஆண்டு அன்றைய கூட்டரசாங்கம் முன்வைத்த 14 அம்சத் திட்டத்தில் தமிழ்மொழி பற்றிய பகுதி சிங்களமொழியின் தகுதியை இல்லாமல் செய்துவிடும் என்று பிரசாரம் செய்ததுதான் யூ. என். பி.

8) 1965 இல் தமிழரசுக்கட்சியுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து விட்டு பின்பு அவர்களை ஏமாற்றிய கட்சிதான் யூ. என். பி.

9) 1968 இல் திருகோணமலையிலுள்ள கோணேசுவரர் ஆலயப் பகுதியைப் புனித பிரதேசமாக்குவதை எதிர்த்த கட்சிதான் யூ. என். பி.

10) 1977 ஆம் ஆண்டு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி சர்வகட்சி மகாநாடு கூட்டித் தீர்வுகாணுவதாகக் கூறிவிட்டு அவ் வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்ட கட்சிதான் யூ. என். பி.

11) 1970 ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழரைப் பற்றியோ தமிழ்மொழியைப் பற்றியோ ஒன்றுமே குறிப்பிடாதது போல் 1977 ஆம் ஆண்டின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மலையகத் தமிழரின் பரிதாபநிலை பற்றி ஒன்றுமே குறிப்பிடத் தவறிய கட்சிதான் யூ. என். பி.

12) 1977 இல் இனக்கலவரத்தின் போது சிங்கள இனவெறியர்களால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டும், பெண்கள் கற்பழிக்கப்பட்டும் தமிழரின் சொத்துக்கள் சூறையாடப்பட்டபோதும் தமிழ் மக்களுக்கும் ''போர் தேவையானால் போர் சமாதானம் தேவையானால் சமாதானம்'' என்று கூறியவர்தான் யூ. என். பி. யின் தலைவர் ஜே. ஆர்.

13) யூ. என். பி. யின் கைத்தொழில் மந்திரி சிறில் மத்தியூ பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரை "பயங்கரவாதத்தை பயங்கரவாதத்தாலேயே நிறுத்தவேண்டும். வேறு எந்தவழியுமில்லை. பயங்கரவாதிகள் கொல்லப்படவேண்டியவர்கள். அவர்கள் விசர் நாய்களைப் போன்றவர்கள். ஹன்சாட் 3 (2) இல் 6 - பங்கு 1257 - 38.

14) 1977 ஆம் ஆண்டு அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் தன்னுடைய பொலிஸ் / இராணுவத்தினரால் பல தமிழ் இளைஞர்களைக் காட்டுமிராண்டித்தனமாகக் கொலை செய்தும், சித்திரவதை செய்தும் வடக்கில் அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிட்டதுதான் யூ. என். பி.

15) 1956 இல் இடதுசாரிக் கட்சிகள், இதற்கென அமைக்கப்பட்ட பாலமொன்றின் மூலம் இலங்கைக்கு வந்துகொண்டிருந்த ஏராளமான இந்தியர்களை வரவேற்பதாகக் காட்டும் படங்களை இடதுசாரிக் கட்சிகளின் தொகுதிகளில் காட்டியதுதான் யூ. என். பி.

16) 1981 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலின் போது தனது காடையர்களையும் முப்படையினரையும் கொண்டு யாழ்நகரிலும் இதர பகுதிகளிலும் நூலகம் உட்பட பல சொத் துக்களை அழித்ததுதான் யூ. என். பி.

17) 1981 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் வெடித்த இனக்கலவரத் தில் பல தமிழர்களைக் கொன்று குவித்ததற்கும் குறிப்பாக மலையகத் தமிழர்களை கொலைகள், கற்பழிப்புகள் தீவைப்புகள் ஆகிய கொடுமைகளுக்கு ஆளாக்கி அவர்களுடைய இடங்களிலி ருந்து வெளியேற்றப்பட்டதற்கும் காரணம் யூ. என். பி.

18) தமிழ் இளைஞர்களைத் தண்டிப்பதற்குச் சாதாரண சட்டங்கள் சரியற்றவை என்பதனாலேயே இதற்காகத் தனியான சட்டங்க ளையும் தனியான நீதிமன்றங்களையும் உருவாக்கியது யூ. என். பி. அரசாங்கம். இச் சட்டங்களைப்பாவித்தே நூற்றுக்கணக்கான இளைஞர்களை இந்த அரசாங்கம் சிறைச்சாலையில் அடைத்துவைத் துச் சித்திரவதை செய்கிறது. மேலும் குட்டிமணியும், ஜெக னும் தூக்குக்கயிற்றில் தொங்கப்போவதற்கு இவைதான் துணை யாயிருக்கின்றன. இதேநேரத்தில் சாதாரண சட்டத்தின் கீழ் இராணுவத்தினரி கந்தையா நவரத்தினம் என்பவரைக் கொன் றபின் அவரிடமிருந்த பணத்தையும் கொள்ளையடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் இராணுவத்தினருக்காக எந்த வித நடவடிக்கையும் எடுக்கவேண்டாமென்று கூறியது இந்த யூ. என். பி. அரசு.

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழ் மக்களும்

சிறிலங்கா சுதந்திரக் கட்சி திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவினால் உருவாக்கப்பட்டதை எல்லோரும் அறிவர். இவர் யூ. என். பி. கட்சியில் ஒரு முக்கிய அங்கத்தவராக இருந்தவர். அல்லாமலும் யூ. என். பி. அரசாங்கங்களின் கீழ் காலத்துக்குக் காலம் பல மந்திரி பதவிகளையும் வகித்துவந்துள்ளார். ஆகவே யூ என். பி. ஆரம்ப காலத்தில் இழைத்த தீங்குகள் அனைத்திற்கும் இவரும் பொறுப்பாளியாவர்.

சிறி லங்கா சுதந்திரக் கட்சி, தனிச் சிங்களத்தை 24 மணி நேரத்தில் அரச கரும மொழியாக ஆக்குவேன் என்பதை முன்வைத்தே ஆட்சிக்கு வந்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஒரு முதலாளித்துவக் கட்சியென்றே நாம் திட்டவட்டமாகக் கூறுகின்றோம். சில சந்தர்ப்பங்களில் அது ஏனைய அரசியல் கட்சிகளின் நிர்ப்பந்தத்தினால் சில முற்போக்கான காரியங்களைச் செய்திருக்கலாம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் யூ. என். பி. ஆட்சியில் நடப்பதைப் போன்றே சிறி லங்கா சுதந்திரக் கட்சி பதவியிலிருந்த காலத்தில் தமிழ் மக்கள் திட்டமிட்ட குடியேற்றம், வேலை வாய்ப்பு, கல்வி போன்றவற்றால் மாத்திரமல்ல, அரச முப்படையினரின் அடக்குமுறைக்கும் ஆளாகினர். சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் தமிழ் மக்கள் அனுபவித்தவை. (1970 — 1977)

1) தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், பல முறை கைது செய்யப்பட்டனர்.

2) தமிழ் இளைஞர்கள் பலர், நான்கு ஐந்து ஆண்டு காலமாக விசாரணையின்றி சிறை வைக்கப்பட்டனர்.

3) தமிழ்மக்கள் வெளிநாடுகளில் சென்று வேலைவாய்ப்புப் பெறுவதைத் தடை செய்யும் நோக்குடன், சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

4) முதன் முதலாக 1971-ம் ஆண்டு தமிழ் மாணவர்களின் உயர் கல்வியைக் குழிதோண்டிப் புதைக்கும் நோக்குடன் தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டது.

5) தரமான தமிழ்ப்பட இறக்குமதி தடை செய்யப்பட்டது.

6) காங்கேசன்துறை இடைத் தேர்தல், அமைதியான சூழ்நிலை இருந்தும், நீண்ட காலமாக அவசர கால சட்டத்தைப் பாவித்துப் பின்போடப்பட்டது.

7) சில தமிழ்த் தலைவர்கள் வெளிநாடு செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டது.

8) தமிழ்க் கலைஞர்கள் இலங்கை வருவது தடை செய்யப்பட்டதன் காரணமாக, தமிழ்க் கலைவளர்ச்சி தடை செய்யப்பட்டது.

9) தமிழ் இளைஞர்கள் இந்தியா போன்ற வெளிநாடுகள் சென்று கல்வி கற்பதற்கு அந்நிய செலாவணி வழங்கப்படாததன் காரணத்தால், அவர்களின் கல்வி வளர்ச்சி தடைப்பட்டது.

10) யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்கு எந்த வித அரச உதவியும் வழங்கப்படவில்லை. இவ்விழாவில் பலர் படுகொலை செய்யப்பட்டனர்; இப்படுகொலையை விசாரிப்பதற்கு ஒரு விசாரணைக் கமிசன் கூட அரசாங்கம் வைக்கவில்லை.

11) பல தமிழ் அரசாங்க ஊழியர், சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாக, வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

12) தற்போது ஜனாதிபதித் தேர்தலில் சிறி லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிடும் கெக்டர் கொப்பகடுவாவின் அரசியல் கூட்டத்தில், யூ என் பி. ஆட்சியினால் இனவாதியென விரட்டியடிக்கப்பட்ட நெவில் பெர்னாண்டோ 17-9-82 சனிக்கிழமை கண்டி ஜோர்ஜ் ஈ. டி. சில்வா பூங்காவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசியதாவது:-

மலைநாட்டில் வாழ்கின்ற இந்நாட்டின் பூர்வீகக் குடிகளுக்குக் காணியோ, வீடுகளோ கிடையாது. ஆனால் ஆட்சியாளரோ தொண்டமானுக்கும், அண்ணாமலைக்கும், செல்லச்சாமிக்கும், பக்

கப் பாட்டுப் பாடி அவர்கள் போடும் தாளத்துக்கு எல்லாம் ஆமாப் போட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமானால், மலையகத்தில் சிங்கள மக்களுக்கே இருக்க இடமில்லாமல் போய்விடும் என்று குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் யாழ்ப்பாணத்தில் இன்று நடப்பது என்ன? எமது பொலிசார் பலர் சுட்டுக் கொல்லப்படுகின்றார்கள். நிலைமை அப்படி இருந்தும் அரசாங்க உயர் பீடத்தினர் தமிழ்த் தலைவர்களை அணைத்துக் குலாவுகின்றனர், அவர்கள் கேட்கும் கோரிக்கைகள் எல்லாம் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

12வது பந்தியில் நெவில் பெர்ணாண்டோ கூறியது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால ஆட்சிக்குக் கட்டியமாக அமைந்துள்ளது.

# மக்கள் விடுதலை முன்னணியும் தமிழ் மக்களும்

மக்கள் விடுதலை முன்னணி (ம. வி. மு.) ஒரு மாக்சியவாதக் கட்சியென்று நடிக்கிறதேயொழிய அது ஒரு குட்டி முதலாளித்துவ இனவாதக் கட்சியென்பது பின்வருவனவற்றிலிருந்து புலனாகும்.

1. 1971 இல் அதனால் ஏற்பட்ட கிளர்ச்சியில் ஒரு தமிழனையாவது பங்குபற்றச்செய்யவில்லை.

2. 1977 ஆம், 1981 ஆம், 1982 ஆம் ஆண்டுகளில் இனக்கலவரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டு தமிழ் மக்கள் கொலை, சித்திரவதை, அழிவுகள் ஆகியவற்றிற்கு ஆளாக்கப்பட்டபோது ம. வி. மு. ஒன்றுமே உதவிசெய்ய முன்வரவில்லை. யாழ்ப்பாணத்தில் நூலகம் போன்ற சொத்துக்கள் தீயினால் அழிக்கப்பட்டபோது இன வெறி பிடித்த தமிழ்த் தலைவர்கள் சிங்கள மக்களை ஆத்திரமடையச் செய்வதனாலேயே அச்சம்பவங்கள் இடம்பெற்றன என்று விஜேவீர கூறியது எமக்கும் தெரியும்.

3. யாழ் பல்கலைக்கழக மாணவன் விமலராஜாவை விடுதலைசெய்யுமாறு கோரி மாணவர்கள் நடாத்திய போராட்டத்தை ம. வி. முன்னணியைச் சார்ந்த மாணவர் சங்கங்கள் ஆதரிக்கவில்லை.

4. ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் பின்பற்றி வந்த வியாபார முகாமைத்துவம் என்ற பாடநெறி சிங்கள மாணவர்களின் நிர்ப்பந்தத்தின் பேரில் திடீரென நிறுத்தி வைக்கப்பட்டபோது அங்கேயுள்ள ம. வி. மு. மாணவர் சங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இனவாத சுவரொட்டிகளையும் அகற்றவில்லை.

1981 இல் நடந்த இனக்கலவரத்தில் காடையர்களால் தமிழ்மக்கள் தாக்கப்பட்டார்கள். இதுபற்றி ம. வி. மு. 15-11-1982 ம் திகதி (3 மாதங்கள் சென்றபின்) தனது பத்திரிகையாகிய 'நியமுவ' வில் வெளியிட்ட அறிக்கையில் நேரடியாக யூ. என். பி, யைக் கண்டிப்பதற்குப் பதிலாக 'இனக்கலவரம் எவரால் கட்டவிழ்த்து விடப்பட்டாலும் அதைக் கண்டிக்கிறோம்' என்று வெளியிட்டது

6. 1981 ல் எதிர்க்கட்சித்தலைவர் திரு, அமிர்தலிங்கத்துக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்து இனவாதத்தைக் கக்கி இனக்கலவரத்துக்குத் தூபமிட்ட நெவில் பெர்ணண்டோவை யூ. என். பியே கட்சியிலிருந்து நீக்கிய பொழுது ம. வி. மு. 1-11-81 ல் "நியமுவ" ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு கவலைதெரிவித்தது: 'நெவில் பெர்ணண்டோ அதையே வேறு விதத்தில் சொன்னபடியால் அவருக்குக் கட்சி அங்கத்துவம் மறுக்கப்பட்டது. உண்மையைக் கூறுவது ஒழுக்கத்துக்கு மாறான செயலென்று யூ. என். பி. யின் அமைப்பு விதிகளில் இருந்தால் அந்த நடவடிக்கை (நெவில் பெர்ணண்டோவை கட்சியிலிருந்து நீக்குவது) சரியாயிருக்கலாம். அது சரியா பிழையா என்று சொல்ல வேண்டியவர்கள் யூ. என். பி. தலைவர்களே எந்தவிதமான விசாரணையுமின்றி அவர் நீக்கப்பட்டார்."

7. 1981 ல் தமிழ் மக்கள் யூ. என். பி. காடையர்களால் தாக்கப்பட்டும் துன்புறுத்தப்பட்டபோது றோகண விஜேவீரா மாத்தறைப் பகுதியில் உயனவத்தையில் நடைபெற்ற கூட்டத்தில் நிகழ்த்திய உரை பின்வருமாறு:

"வடக்கில் ஒரு பகுதியினர் தமிழ் ஈழம் என்ற விளையாட்டைத் தொடங்கியுள்ளனர். அதற்கு இன்று த. வி. கூ. முன்னின்று செயல்படுகிறது. அதன் நோக்கம் வடக்கிலும் கிழக்கிலும் 7 மாவட்டங்களினதும் நிர்வாக அதிகாரத்தைக் கொண்ட தனிநாடு கேட்பதே. இக் கோரிக்கை சம்பந்தமாக இன்று அங்கு பயங்கரவாதம் ஆட்சி செய்கிறது" "நியமுவ" (16-5-1981)

8. 1981 ல் யாழ் நூலகம் போன்ற சொத்துக்கள் தீ வைத்துச் சேதமாக்கப்பட்டபோது அரச பயங்கரவாதத்தைக் கண்டிக்கத்தவறிய றோகண விஜேவீர தமிழ் இளைஞர் பயங்கரவாதத்தை மட்டும் கண்டித்தார்.

9. ம. வி. முன்னணியின் 1982 மேதினச் செய்தியில் இஸ்ரேலைக் கண்டித்தும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள புரட்சிகளை ஆதரித்தும் வெளியிட்ட அறிககையில் இலங்கைத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றி ஒன்றுமே கூறப்படவில்லை.

10. உமாமகேஸ்வரன் பிரபாகரன் ஆகியோரை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தும் விவகாரம் பற்றி ஒன்றும் பேசாத ம. வி. முன்னணியின் பொதுச்செயலாளர் லயனல் போப்பகே கூறியதாவது: ஒன்றிணைந்த சமதர்ம இலங்கைபற்றி நம்பிக்கை வைத்திருக்கும் ம. வி. மு. வடக்கில் முதலாளித்துவ வாதிகளின் ஈழ இயக்கத்தையும் அவர்கள் மேற்கொண்டுவரும் பயங்கரவாத இயக்கத்தையும் எதிர்க்கிறது. பொதுவாகப் பயங்கரவாதம் மிகவும் ஆபத்தானதாகையால் நாம் அதைக் கண்டிக்கின்றோம். (நியமுவ 20-6-82)

தமிழ் மக்களின் விடுதலை இயக்கங்களை எதிர்ப்பவர்கள் தாங்கள் விரும்பிய நேரத்தில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று கூறுவது வேடிக்கையாகும்,

ரோகண வியேவீர உக்குவலையில் உரையாற்றிய பொழுது அல்பிரட் துரையப்பா ஆ. தியாகராசா போன்றோரும் பொலிஸ் இராணுவப் படைகளைச் சேர்ந்தவர்களும் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக ஒருவருக்கெதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கூறினர். ஆனால் தமிழ் மக்களும் இளைஞர்களும் சிங்கள இனவெறிக் காடையர்களாலும் முப்படையினராலும் படுகொலை செய்யப்பட்டது பற்றி ஒன்றுமே கூறவில்லை. (நியமுவ 29-8-81)

11. அண்மையில் கண்டியில் நடைபெற்ற ம. வி. மு. பொதுக்கூட்டத்தில் ரோகண விஜேவீரா பேசும்போது இந்த நாட்டிலுள்ள 'நாடார்களை' தான் ஆட்சிக்கு வந்தால் நாட்டைவிட்டு விரட்டப்போவதாகக் கூறியுள்ளார். 'இவர் நாடார்' என்று கூறியது மலையக மக்களையா?

12. பாலியகொடையில் ஒரு ஜனாதிபதி தேர்தல் கூட்டத்தில் அடுத்த ஜனாதிபதி ரோகண விஜேவீர பேசும்போது எங்கள் இளைஞர்களை தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் கொலை செய்கிறார்கள். இதற்காக இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது, மேலும் எங்கள் மதகுருமார் இந்த இளைஞர்களின் மரணச்சடங்குகளில் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க இந்த அரசாங்கம் அனுமதிக்கவில்லை என்று கூறியிருக்கிறார். இந்த சோசலிசவாதி 'எங்கள் இளைஞர்கள்' என்று சிங்களப் படையினரையே குறிப்பிட்டுள்ளார். சிங்களப்படையினரைக் கொலைசெய்வது பற்றிக் குறிப்பிட்ட இவர் அப்பாவித் தமிழ்மக்களைப் படையினர் படுகொலை செய்ததைப்பற்றி எதுவும் குறிப்பிடாமல் இருப்பதைப் பார்த்து தமிழ்மக்கள் ஆச்சரியப்படத்தேவையில்லை. மேலும் இந்த மாக்

சியவாதி புத்தகுருமாரின் இனவெறிப் பிரசாரத்திற்கு உரிமை கேட்பது பேச்சுச் சுதந்திரத்திற்கு ஒரு புதிய முறையில் போராட்டம் நடாத்துவதைக் காட்டுகிறது.

13. அண்மையில் மாத்தளையில் ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய ரோகண விஜேவீர கூறியதாவது: நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் 'புலிப்படையினரின் விளையாட்டுக்களை உடனடியாக நிறுத்துவேன். இவர்களை 'அடக்குவதற்காக அங்கு அப்பாவிப் பொலிசாரை அனுப்புகிறார்கள். அவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு அநியாயமாகப் பலியாகின்றனர். யாழ்ப்பாணத்தில் நடக்கும் இந்த விளையாட்டுக்கு எத்தனையோபேர் பலியாகியுள்ளனர். இந்த அரசாங்கம் இதை நிறுத்த முடியாதா? ஆனால் நாம் பதவிக்கு வந்தால் புலிப்படையினரின் இந்த விளையாட்டுக்களை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுப்போம்'' (வீரகேசரி 23-9-82) புலிப்படையினரை அடக்க முற்படும் புரட்சிவாதி ரோகண விஜேவீர புலிப்படை என்று கூறப்படும் இயக்கம் தோன்றுவதற்குரிய பிரச்சனைகள் தீர்ப்பதுபற்றி ஏன் ஒன்றும் கூறுகிறாரில்லை, மேலும் யூ. என். பி. அரசாங்கம் நடத்தும் கொலை, கொள்ளை, சிறை, சித்திரவதையை விட ரோகண விஜேவீர ஆட்சிக்கு வந்தால் இதைவிடப் படுமோசமாகத் தமிழ் மக்கள் நடாத்தப்படுவார்கள் போல் தெரிகிறது. ●

# ல. ச. ச. கட்சியும் தமிழ் மக்களும்

கொல்வின், சிறீமாவோ அரசில் மந்திரியாக ஐந்து ஆண்டுகள் இருந்தவர். சிறீமாவோ அரசு நடத்திய அடக்கு முறை அரசாங்கத்தில் தமிழ் மக்களும், தொழிலாளர்ளும், பொதுமக்களும் கொல்லப்பட்டபோது இதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காதவர்.

1. சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்தென்ற கொள்கையை 1960-ம் ஆண்டுகளின் பின் காற்றில் பறக்க விட்டார்.

2. 1963-ல் ஏற்பட்ட இட்துசாரி ஐக்கிய முன்னணியை (சிறீமா அரசில் மந்திரிப் பதவிக்காக) உடைத்தது ல. ச, ச. கட்சியே.

3. 1972ம் ஆண்டின் அரசியல் யாப்பினை வரைந்த கொல்வின் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முன்வைத்த குறைந்த பட்ச ஆலோசனைகளையும் முற்றாக நிராகரித்தார்.

4. சாதாரண சட்டமாக இருந்த தனிச் சிங்களச் சட்டத்தை அரசியல் யாப்பில் உட்படுத்திய கொல்வின் தமிழ் மொழி உபயோக விசேச சரத்துக்கள் சட்டத்தைக் கூட இரத்தாக்கினார்.

5. 1966-ல் தமிழ் மொழி (விசேச சரத்துக்கள்) சட்டத்தை எதிர்த்து ஊர்வலம் செய்த ல. ச. ச. க. ''மசால வடை'' என்ற இனவாதக் கோசம் செய்தது.

6. தோட்டத்துறை அமைச்சராகவிருந்த கொல்வின் தோட்டத் தொழிலாளருக்கு மாதச் சம்பளமோ, பிரசா உரிமையோ மனிதாபிமான வசிப்பு வசதிகளோ வழங்கவில்லை.

7. தொழிலாள வர்க்க சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்வ தாகக் கூறும் கொல்வின் 1972-ம் ஆண்டில் நடந்த வங்கி, ஊழியர் வேலை நிறுத்தத்தை முறியடித்தவர்.

8. 1977-ல், 1979-ல், 1981-ல் தமிழ் மக்கள் கொலை, கொள்ளை தீ வைப்பு, சிறை, சித்திரவதை போன்ற கொடிய தாக்கு தல்களுக்கு ஆளாக்கப்பட்ட போது கொல்வின் தமிழ் மக்க ளுக்காகப் போராடவில்லை.

9. 1977 ல் நடந்த இனவாத வன்முறைகளின் போது ராகலைத் தோட்டத்தைச் சேர்ந்த தனலட்சுமி என்ற இளம் பெண் மூன்று சிங்களக்காடையர்களால் கற்பழிக்கப்பட்டார். நீதி மன்றத்தில் இவர்கள் குற்றவாளிகள் என தீர்ப்புக் கூறப் பட்டது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இக்குற்றவாளி களை ஆதரித்துக் கொல்வின் வாதாடினார். இத்தகைய காட்டு மிராண்டித்தனமான செயல்களை நாம் ஒருபோதும் ஆதரிக்கப் போவதில்லை. எமது கொள்கைகளுக்கு ஊறு விளைவிக்காத முறையிலேயே நாம் எமது தொழில் திறமைகளைப் பயன் படுத்துவோம்.

# அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் தமிழ் மக்களும்

1. குமார் பொன்னம்பலத்தின் கட்சியான தமிழ்க் காங்கிரஸ் ஆரம்ப காலத்திலிருந்தே, தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த எந்த வித அக்கிரமத்திற்கு எதிராகவும் ஒரு போராட்டத்திற்கும் தலைமை தாங்கி நடத்தவில்லை.

2. தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதே தன்னுடைய முக்கிய பணியென்று பாராளுமன்றம் சென்றவர் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி பொன்னம்பலம். இவர் யு. என். பி. அரசில் மந்திரியாக இருந்த நேரத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக அரசு நடத்திய நடவடிக்கைகளை எதிர்க்காதவர். இவர் மந்திரியாக இருந்த காலத்தில்தான் மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதை எல்லோரும் அறிவர். இன்று ஜனதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிற்கும் குமார் பொன்னம்பலம் தகப்பன் விட்ட தவறையே ஒப்புக்கொள்ளும் துணிச்சலற்றவர்.

3. தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் பெரும் பகுதியினர் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து த. வி. கூட்டணியை உருவாக்கி தமிழீழக் கோரிக்கையைப் பற்றிப் பேசிய பொழுது அதை எதிர்த்தவர் குமார் பொன்னம்பலம். பின்பு தமிழீழத்தைத் தான் ஆதரிப்பதாகக் கூறினர். ஆனல் இன்று வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் மாத்திரமல்ல ஏனைய மாகாணங்களிலுள்ள தமிழ் மக்களும் தமிழீழத்தை ஆதரிக்கின்றனர்களா என்பதை அறிய முயற்சி செய்கின்றர். இதைப் பார்க்கும்போது தமிழீழக் கோரிக்கையை வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் நலனுக்காகவல்ல தன்னுடைய சொந்த நலனுக்காகவே உபயோகிக்க எண்ணுகிறர் போலத் தெரிகிறது.

4. இன்று சர்வதேச முதலாளித்துவ வாதியான ஜே ஆர். கூடத் தன்னை பெயரளவிலாவது ஒரு சோஷலிசவாதியாகக் கூறுகின்றார். ஆனால் குமார் பொன்னம்பலம் தனக்கும் சோஷலிசத்திற்கும் எந்த விதமான தொடர்பும் இருப்பதாக எந்த இடத்திலும் கூறியதாக நாம் அறியோம்.

5. இவர் தன்னுடைய இன்றைய தேர்தற் பிரசாரத்தை தமிழையும் தமிழனையும் அடிப்படையாக வைத்து நடத்துகின்றாரே தவிர யூ. என். பி. எதிர்ப்பை வைதது நடத்தவில்லை இவருக்கும் யூ. என். பித் தலைவர்களுக்கும் உள்ள தொடர்பை இலங்கை மக்கள் எல்லோரும் அறிவர்.

6. குமார் பொன்னம்பலம் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்குக் கிடைக்கக்கூடிய வாக்குக்களையே பறிக்க எண்ணுகின்றார். இதன்மூலம் இவர் யூ. என், பி க்கு. மறைமுகமாக ஆதரவு காட்டுகின்றார்.

# நவ சமசமாஜக் கட்சியும் தமிழ் மக்களும்

நவ சமசமாஜக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தோழர் வாசுதேவ நாணயக்கார போட்டியிடுகின்றார். ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் பாசிச ஆட்சிக்கு எதிராக தொடர்ச்சியாக துணிச்சலுடன் போராடிய ஒரே கட்சி நவ சமசமாஜக்கட்சி. எமது கட்சி நடத்திய போராட்டங்களுள், தமிழ் மக்களின் உரிமைக்காக நடத்திய போராட்டங்கள் கணிசமான பங்கை வகிக்கின்றன. இதே நேரத்தில், ஏனைய எதிர்க்கட்சி வேட்பாளர்களான கொல்வின், கொப்பேகடுவா, ரோகண விஜேவீர, குமார் பொன்னம்பலம் போன்றோர் தமிழ் மக்களுக்காக நடத்திய போராட்டங்கள் எத்தனை என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள். நவ சமசமாஜக்கட்சி தமிழ் மக்களுக்காக நடத்திய போராட்டங்களை கீழே தருகின்றோம்.

1) இந்த நாட்டிலே பல இடதுசாரிக் கட்சிகள் இருந்த போதும், எங்களுடைய கட்சிதான் முதன் முதலாக தமிழ் பேசும் மக்களை ஒரு தேசிய இனமாகவும், அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதையும் கூறியது.

2) யூ. என். பி. ஆட்சிக்கு வந்தவுடன், 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஒரு இனக் கலவரம் நடை பெற்றது. இவ் இனக்கலவரத்திலிருந்து, தமிழ் மக்களைக் காப்பாற்ற கண்டி, இரத்தினபுரி போன்ற இடங்களில் எமது கட்சி பாதுகாப்புக் குழுக்களை அமைத்து செயற்பட்டது. ஏனைய எதிர்க் கட்சிகள் என்ன செய்தன என்பதை அறிய விரும்புகின்றோம்.

3) தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் அங்கமான தமிழ் இளைஞர் பேரவையின் தலைவர்களான காசி ஆனந்தன், மாவை சேனாதி

ராசா போன்றோர் 1978 பெப்ரவரி 5ம் தேதி கைது செய்யப் பட்டு தடுப்புக் காவலில் இருந்த போது அவர்களை விடுதலை செய்யும்படி கோரி, நாடு முழுவதும் ஒரு சுவரொட்டிப் போ ராட்டத்தை நடத்தினோம்.

4) 1978ம் ஆண்டு யூ. என் பி. ஆட்சியாளர் கொண்டு வந்த புதிய அரசியல் யாப்பை எதிர்த்து, எமது கட்சியின் பொதுச் செய லாளரான தோழர் விக்கிரமபாகு கருணரத்தினவும், எமது கட் சித் தோழர்களும் கறுப்புக் கொடி ஏற்றியமைக்காக கைது செய் யப்பட்டனர். இதற்காக எமது பொதுச் செயலாளர் தோழர் விக்கிரமபாகு கருணரத்தின வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டார்.

5) 1979-7-19 ம் தேதி தமிழ் இளைஞர்களை அழித்து ஒழிக்கும் நோக் குடன், அரசாங்கம் புலித் தடை சட்டத்தைப் பாராளு மன்றத் தில் கொண்டு வந்தது. அன்றைய தினம் எமது கட்சி ஒரு சவப் பெட்டி ஊர்வலத்தை நடத்தியது. இந்த ஊர்வலம், கொழும்பு டிமெல் பாக்கிலிருந்து பாராளுமன்றம் நோக்கிச் செல்லும் வழி யில் கொம்பனி வீதியில் பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனால் தொடர்ந்து ஊர்வலம் சென்றதால், பொலிசார் குண் டாந்தடியால் எமது தோழர்களைத் தாக்கினார்கள். இத்தாக்கு தலில், தோழர் வாசுதேவ நாணயக்கார, சத்தியபால போன் றோர் காயமடைந்தனர்.

6) 1979ம் ஆண்டு பிரிகேடியர் வீரதுங்காவிடம் யாழ்ப்பாண நிர் வாகம் ஒப்படைக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் அரச பயங் கரவாதத்தினால் நடந்த அட்டூழியங்களுக்கு எதிராக தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பாராளுமன்றத்தில் பிதற்றியதைத் தவிரவேறொன்றும் செய்யவில்லை. இத்தகைய வேளையிலேயே நீதிக் கும் சமத்துவத்துக்குமான இயக்கம் யாழ்ப்பாணத்தில் உருவா கியது இக்கிளையை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கு முக்கிய பங்கு எடுத்தவர் எமது கட்சியைச் சேர்ந்த தோழர் குமார் டேவிட் இவர் அரச பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்ட மக்களைக் கண்டு மேற்படி இயக்கத்துக்காக ஒரு அறிக்கையும் விட்டார்.

7) இவ் அரச பயங்கரவாதத்திற்கு எதிராக 1979 டிசம்பர் 9ம் தேதி வீரமாகாளியம்மன் கோவிலில் நடைபெற்ற உண்ணாவிரதப் போ ராட்டத்தையும், நல்லூர் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தையும் ஒழுங்கு செய்வதில் எமது கட்சி அங் கத்தவர்கள் முக்கிய பங்கெடுத்தனர்.

8) 1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ம் திகதி லங்கா சமசமாஜக்கட்சி யூ. என். பி. யை எதிர்க்க ஒரு எதிரணியை உருவாக்கியது. இதில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சி புரட்சிகர மாக்சியக் கட்சி மக்கள் விடுதலை முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி, நவசமசமாஜக்கட்சி போன்றவற்றிக்கே அழைப்பு விடுத்திருந்தது. எமது கட்சி இவ் அழைப்பித்கு 1980 ஜனவரி 30 ம் தேதி பின்வரும் பதிலை அனுப்பியது. அதாவது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி போன்ற கட்சியை இனி எதிரணி கூட்டில் அழைக்கும் நீங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஏன் அழைக்கவில்லை. என்று இதன் பின்பே தமிழர் விடுதலைக் கூட்டணியும் எதிரணிக்குள் சேர்க்கப்பட்டது.

9) தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி, தொழிலாளர் வர்க்கத்திற்கும், தமிழ் மக்களுக்கும் துரோகம் செய்யும் இவ் அரசை பற்றி ஆராய ஒரு பேராளர் மாநாட்டை கூட்ட முடிவு செய்தது. இம் மாநாட்டுக்கு மொழி வழி தொழிற் சங்கங்களும் கலந்து கொள்ள வேண்டும் என் நாம் வலியுறுத்தியதன் பயனாகவே தோழர் ஐ. தி. சம்பந்தமூர்த்தி இம் மாநாட்டிற்கு அழைக்கப்பட்டு அதில் கலந்து கொண்டார்.

10) 1980 மார்ச் 8ம், 9ம் தேதிகளில் சுகததாச விளையாட்டு அரங்கில் 4000 பேராளர்களைக் கொண்ட மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் 23 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. இம் மாநாட்டில் நவ சமசமாஜக் கட்சி இலங்கையைத் தாயகமாக்க விரும்பும் இந்தியத் தொழிலாளர்கள் அனைவருக்கும் குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி போன்றவற்றைக் கூட்ட இக்கோரிக்கையை ஏற்க வைத்தது.

11) தமிழ் மாணவர்களுக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைச்சர் சிறில் மத்தியூ தமிழ்ப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும், தமிழ் மாணவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதி தேர்வில் கூடுதலான புள்ளிகள் வழங்கப்படுவதாக ஒரு பொய்ப் பிரசாரத்தை மேற்கொண்டார். இதற்கு எதிராக நவசமசமாஜக் கட்சியின் மாணவர் சம்மேளனம் போராடியது. அல்லாமலும் எமது கட்சிக்கு ஆதரவான விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் அமைச்சரின் கூற்றை எதிர்த்து பல தகவல்களைச் சேகரித்து வெளியிட்டு உதவினர்.

12) 1980 ம் ஆண்டு மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டபோது இந்த நாட்டிலே உள்ள எந்த

ஒரு அரசியல் கட்சியும் அவர்களுக்கு எந்த விதமான உதவியோ பாதுகாப்போ வழங்கவில்லை. ஆனால் எமது கட்சியைச் சேர்ந்த சட்டத்தரணி சரத் விதான பத்திரான போன்றவர்களே இத் தொழிலாளர்களுக்காக நீதி விசாரணைகளில் உதவினர்.

13) 1981ம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தல் காலங்களில் நிகழ்ந்த அக்கிரமங்களுக்கு எதிராக எமது கட்சி, நாடு முழுவதும் ஒரு சுவரொட்டிப் போராட்டம் ஒன்றை நடத்தியது. இப்போராட்டம் பற்றி கருத்துத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியினர், 1971ம் ஆண்டு நடைபெற்ற அக்கிரமத்தைவிட யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்தது ஒன்றும் பெரிதில்லை யென்றனர்.

14) 1982ம் ஆண்டு யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர் நடத்திய வேலை நிறுத்த போராட்டத்தில் எமது கட்சி முக்கிய பங்கை வகித்து வெற்றி பெறச் செய்தது.

15) இந்தியாவிலே கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களான உமா மகேஸ்வரன், பிரபாகரன் போன்றோரை இலங்கை அரசாங்கம் தன்னிடம் ஒப்படைக்குமாறு இந்திய அரசிடம் வேண்டு கோள் விடுத்திருந்தது. இவ் இரு இளைஞர்களை இந்திய அரசு இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்க கூடாது என்று முதன் முதலாக இந்த நாட்டிலே குரல் எழுப்பியது எமது கட்சி தான்.

16) கடந்த ஒன்பது மாதங்களாக போராடிய பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்காக எமது கட்சி பரந்தன் ஒத்துழைப்புக் குழுவினருடன் இணைந்து பல் போராட்டங்களை நடத்தியது.

# ஜனாதிபதி தேர்தலில் நவ சமசமாஜக் கட்சி முன்வைத்துள்ள ஏழு அம்ச வேலைத்திட்டம்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நவசமசமாஜக் கட்சி பின்வரும் வேலைத்திட்டத்தை முன்வைத்து போட்டியிடுகிறது. இவ் வேலை திட்டத்தில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்பதும் ஒன்றாகும் இத்தேர்தலில் போட்டியிடுகின்ற ஏனைய ஐந்து அரசியல் கட்சிகளும், தமிழ் மக்களை பற்றியதோ, அன்றேல் இந்நாட்டின் தொழிலாளர், விவசாய, மக்களின் நலன்கருதி ஒரு புரட்சிகர வேலை திட்டத்தை முன்வைக்கவில்லை என்பதை தமிழ்பேசும் மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

## ஏழு அம்ச வேலைத் திட்டம்

1) ஜே. ஆரை வெளியேற்றி பாராளுமன்றத்தைக் கலை
2) வேலை நிறுத்தக்காரர்களுக்கு, மீண்டும் வேலைவழங்கு.
3) தொழிலாளர், விவசாயிகள், படைவீரர்கள் சபைக்கு அதிகாரங்கள் வழங்கு
4) தொழிலாளர், விவசாயிகள், படைவீரர்களின் பேராளர்கள் கொண்ட அரசியலமைப்பு சபையை அமை, அடக்குமுறைச் சட்டங்களை நீக்கு, குடியியல் உரிமைகளைப் பாதுகார்.
5) சுயநிர்ணய உரிமையை அங்கீகரி.
6) அந்நிய கம்பனிகளை, பெரிய வர்த்தக நிறுவனங்களை நில உடமையைத் தேசிய மயமாக்கு. உழுபவனுக்கு நிலத்தைக் கொடு.
7) வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறை, நியாயமான விலையில் அத்தியாவசிய பண்டங்களைப் பங்கீடு செய்.

இத்தேர்தலில் நவ சமசமாஜக் கட்சி வேட்பாளர் வாசுதேவ நாணயக்கார மேற்படி வேலைத்திட்டத்தை முன்வைத்துப் போட்டியிடுகின்றார். அவர் முன்வைத்துள்ள வேலைத் திட்டத்தை ஆதரித்துத் தமிழ்மக்கள் தமது முதலாவது வாக்கை அவரின் குடை சின்னத்துக்கு அளிக்கவும். ஏனைய இரண்டாம், மூன்றும் வாக்குகளை

1) இன விரோத யூ. என் பி. ஆட்சியை விரட்டியடிக்கவும்
2) ஒரு நிலையற்ற ஆட்சியை ஏற்படுத்துவதற்காகவும்

வெற்றி பெறக் கூடிய எதிர்க் கட்சிகளுக்கு அளிக்கவும்.

இல. 17, பெரக் வீதி, கொழும்பு - இல் உள்ள நவ சமசமாஜக் கட்சிக்காக ஆ. க. அண்ணாமலை அவர்களால், யாழ்ப்பாணம் 430, காங்கேசன்துறை வீதியில் உள்ள செட்டியார் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. 12-10-82